# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
## Provincial Department of Education – Northern Provi

### இரண்டாம் தவணைப்பரீட்சை - 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 11 | தமிழ் மொழியும் இலக்கியமும் II<br>Tamil Language and Literature II | நேரம் :- 2மணித்தியாலம் |
| சுட்டெண்:...................... | 22 \| T \| I,II | |

### தமிழ் மொழியும் இலக்கியமும் II

**கவனிக்க:**

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடையைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- ❖ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1) சுருக்கமான விடை தருக**

1. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக
   குரிசிலவ ராரென்று
2. பின்வரும் தொடரிலுள்ள எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக
   விசுவநாத பிள்ளையின் பார்வை நாவலர் அவர்களின் முகத்தில் விழுந்தது
3. சமூகத்திலுள்ள பலரால் தத்தம் இயல்புக்கேற்ப இலட்சியங்கள் கடைப்பிடிக்கப்பட்டன.
   இதனை செய்வினை வாக்கியமாக எழுதுக
4. பின்வரும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு மீண்டும் திருத்தமாக எழுதுக
   ஏன்கா ராவயில மட்டும் பக்குல் கத்துது என்று அடக்கமுடியாமற் கேட்டேன்
5. இவரது நூல்களுள் இனிப்படமாட்டேன், வீடற்றவன் முதலான நூல்கள் உள்ளன. இங்கு இடம்பெற்ற இடைச்சொற் தொடர் யாது
6. அன்றிலிருந்து புகையிலைக்கன்றுக்கு பாத்தி கட்டுவது போல. இங்கு இடம்பெற்ற இடுகுறிச் சிறப்புப் பெயர் யாது
7. ‘‘நிலத்தில் புதைக்கப்பட்டு வெளியே எடுத்த கள்ளை ஒவ்வொரு குடிசைகளாய் பகிர்வார்களே…’’
   இங்கு இடம்பெற்ற வழுவைச் சுட்டிக்காட்டி மீண்டும் திருத்தமாக எழுதுக
8. பாரதி எளிமையான சந்தங்களை அழகாகக் கையாண்டான். இங்கு இடம்பெற்ற பெயரடையாது?
9. களவாக ஓடிவந்த காதலியைக் கண்டான். இங்கு இடம்பெற்ற வேற்றுமை உருபு யாது
10. பின்வரும் வாக்கியத்தில் காணப்படும் திசைச்சொல் யாது
    ‘ஒரு மைதானத்தின் அளவில் மிகப்பெரிய சமாச்சாரம்’

(2X1=20 புள்ளிகள்)

**2. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிந்து 250 -300 சொற்களில் எழுதி பொருத்தமான தலைப்பும் இடுக.**

(i) இன்று போசாக்கு மிக்க உணவை எமது சமூத்தினர் அவசியம் பெற்றுக்கொள்ள வேண்டும். போசாக்கின் மூலமே உடலின் சக்தி அதிகரிக்கப்படும். போசாக்கு கிடைக்கப்பெறாவிடின் சிந்திக்கும் ஆற்றலும் செயலாற்றலும் நம்மிடமிருந்து விலகிச்செல்லும். எமது சூழலில் அன்றாடம் பெற்றுக்கொள்ளப்படும் தானியங்களையும், உணவு வகைகளையும் விலங்குணவுகளையும் கொள்வதால் போசாக்கை நிறைவுசெய்பவர்களாக விளங்குகிறோம். மனிதனது நிறைவான வாழ்க்கைக்கு போசாக்கான உணவு அவசியம். எனவே மேற்குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கிய **ஒரு விளக்கக் கட்டுரை** எழுதுக.

(ii) இலங்கை போன்ற நாடுகளை உலக நாடுகள் மத்தியில் பிரபலமடையச் செய்வன அந்தந்த நாடுகளின் வரலாற்றுச் சின்னங்களாகும். அவை, ஒரு நாட்டிற்குச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் மையங்களாகவே விளங்குகின்றன. இச்சுற்றுலா மையங்களால் அந்தச் சூழலில் உள்ள மக்களின் வாழ்வாதாரம் உயர்வடைவதோடு நாட்டின் பொருளாதாரமும் உயர்வடைவதாகவே அமையும். இதற்காக அரசாங்கம் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கும் விடயங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற பொருள்பட சமூகவியல் மன்றவிழாவில் நீர் நிகழ்த்திய **மேடைப்பேச்சு**

(iii) இயற்கை அனர்த்தம், வெள்ளப்பெருக்கு என்பன மனிதனுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தவல்லன. வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் இயற்கைத் தாவரங்கள் சரிந்து விழுவதும், குடிசைகள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்படுவதும் விலங்குகளும் பறவைகளும் இருப்பிடம் இன்றி துன்பப்படுவதும் கண்முன்னே காணக் கூடிய ஒன்றாகும். விவசாயப்பெருநிலங்கள் அழிவடைவதும் தவிர்க்கமுடியாததாகுகும். மேற்குறிப்பிட்ட சம்பவங்களை எடுத்துக் கூறி **ஒரு விபரணக் கட்டுரை** எழுதுக

(iv) அசாதாரண சூழ்நிலையால் தனது கூலித்தொழிலை இழந்த தந்தையொருவர் தன்னுடைய குடும்பத்தை சிறந்தமுறையில் கொண்டு செல்ல முடியாமல் தவித்தார். சிறுதானியப் பயிர்ச் செய்கை, வீட்டுத்தோட்டம் என்பனவற்றின் பயன்கள் குறித்து அரசாங்கம் வழங்கி சிறந்த கருத்துக்களைப் பின்பற்றியதால் இன்று வீட்டுத்தோட்டப் பயர்ச்சசெய்கையில் சிறந்த விருதையும் பெற்றவராக விளங்கிய ஒரு தந்தையின் வாழ்வை வெளிப்படுத்தும் வகையில் **ஒரு சிறுகதை** எழுதுக

(25 புள்ளிகள்)

**3. பின்வரும் பந்தியை வாசித்து அதன் சாராம்சத்தை 40 – 45 சொற்களில் அமையுமாறு ஒரு சுருக்கம் எழுதுக. சுருக்கத்தின் இறுதியில் சொற்களின் எண்ணிக்கையகைக் குறிப்பிடுக**

கலை இலக்கியங்கள் எவ்வளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளனவோ அதேயளவுக்கு விமர்சனங்களும் அவசியமானவையாகக் கருதப்படுகின்றன. ஆயினும் தமிழில் கலை இலக்கியங்கள் வளர்ந்த அளவோடு ஒப்பிடுகையில் விமரிசனக் கலை போதியளவு வளர்ச்சி பெறவில்லை என்ற குறை நிலவி வருவதை அவதானிக்கலாம். விமரிசனம் குறித்து பல நூல்கள் வெளிவந்தபோதும்

அது பற்றிய போதுமான புரிதலின்மை இன்னமும் உள்ளது. படைப்பாளிக்கும் வாசகருக்குமிடையில் தொடர்பை வலுப்படுத்துவதோடு மேலதிக விளக்கங்களை ஏற்படுத்துவதாயும் விமரிசனம் திகழவேண்டும். இந்த முயற்சி போதியளவு வெற்றிபெறாத காரணமாயும், - அதற்குத் தடையாக படைப்பாளர்கள் விமரிசனத்தைக் கண்டு சீற்றம் கொள்ளும் பக்குவமின்மைகளாலும் விமரிசனக் கலை வளர்ச்சி பெற இயலாதுள்ளது.

ஆக்கங்கள் அனுபவச் செழுமைகளை உணர்வெழுச்சியுடன் வெளிப்படுத்துவன. வாழ்விலிருந்து பிறந்து ஏனையவர்களது வாழ்வைச் செப்பனிட ஏற்றதாக படைப்பாக்கம் மிளிர்கிறது என்ற வகையில் அவை குறித்த கருத்துகள் சமூகத்தில் உணர்வைத் தாண்டும் சிறு பொறிகள் போன்ற பண்புடையன. நல்ல படைப்புகள் மனித உணர்வுக் காட்டின் தீமைகளை எரிக்கும். கேடானவை மனித சமூகக்கையே வெந்து சாம்பலாய் நாசமாக்க வல்லன. அவை குறித்த விமரிசனம் பக்கச் சார்பின்றி துணிச்சலுடன் வெளிப்பட அவசியமுள்ளன

(10 புள்ளிகள்)

**4. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக**

சி.வை.தாமோதரம்பிள்ளை தமிழ் நூற்பதிப்புத் துறையின் முன்னோடி. பண்டைக் காலத் தமிழ் இலக்கியங்களைப் பதிப்பிப்பதைத் தம் வாழ்நாள் பணியாகக் கொண்டிருந்தார். டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் 1888இல் முதன் முதலில் சீவக சிந்தாமணியைப் பதிப்பித்தார். தாமோதரம் பிள்ளை அவர்கள் அதற்கு முன்னரே நீதிநெறி விளக்கவுரை, வீரசோழியம் ஆகியவற்றை 1881லும், தணிகைப் புராணத்தை 1883லும், தொல்காப்பியப் பொருளதிகாரத்தை 1885லும், கலித்தொகையை 1887லும் பதிப்பித் துள்ளார். கலித்தொகையை முதன் முதலில் பதிப்பித்தவர் இவரே. டாக்டர் உ.வே.சா. போன்றோர் ஏடுகளைத் தேடிக் கண்டுபிடித்து ஒப்புநோக்கி, மிக முயன்று பாடவேறுபாடுகளுடன் நூல்களைப் பதிப்பித்துள்ளார். தமிழ் நாடெங்கிலுமுள்ள தொல்காப்பியப் பிரதிகள் மிகச் சிலவே. அவையாவும் நான் தேடிக் கண்டவரை ஈனஸ்திதி அடைந்திருப்பதால் இன்னும் சில வருடங்களுக்குள் அழிந்துவிடுமென அஞ்சியே, உலோகோபகாரமாக அச்சிடலானேன்" என இவர் தன் தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையம் உரைப்ப பதிப்பில் குறிப்பிட்டுள்ளார். இவர் ஈழ நாட்டில் சிறுப்பிட்டி என்னும் ஊரில் பிறந்தவர். தமிழைப் புறக்கணிப்போரைக் கண்டிக்கும் இயல்பினர். கல்லூரிகளில் தமிழெடுத்துப் படிப்பவர்க்குப் பரிசுகள் வழங்கி ஊக்குவித்து வந்தார். பதிப்புத் துறைத் தூண்களில் சிறப்பிடத்தில் நிற்கும் பெருமையுடையவர் சி.வை.தாமோதரம்பிள்ளை எனலாம்.

1. சி.வை.தாமோதரம்பிள்ளை தம் வாழ்நாள் பணியாக எதனைக்கொண்டிருந்தார்?
2. சீவகசிந்தாமணியைப் பதிப்பிக்கப்படுவதற்கு முன்னர் பதிப்பிக்கப்பட்ட நூல்கள் எவை?
3. டாக்டர் உ.வே.சா. போன்று சி.வை.தாமோதரம்பிள்ளை மேற்கொண்ட பணி என்ன?
4. தொல்காப்பியப் பிரதிகள் மிகச் சிலவே கிடைத்திருக்கின்றன என சி.வை.தாமோதரம்பிள்ளை குறிப்பிடக் காரணம் என்ன?
5. தமிழில் ஈடுபாடுடையோர் மீது இவர் கொண்ட மதிப்பு யாது?

(10 புள்ளிகள்)

**5. பின்வரும் பகுதியை வாசித்து 100 சொற்களில் எழுதுக**

உமது பிதேசத்தில் பெண்தலைமைத்துவத்தால் குடும்ப வருமானம் அதிகரிக்கின்றது. பெண்கள் பல்வேறு வழிகளிலும் முயற்சியுமையவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனாலும், பெண்களுக்கென்ற தொழிற் பாதுகாப்பு, கல்வி, கருத்துச் சுதந்திரம், பொழுதுபோக்கு , தாய் சேய் நலன் முதலிய தனித்துவம் வாய்ந்த அம்சங்களும் உரிமைகளும் மற்றவர்களால் மதிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி மாதர் சங்கச் செயலாளர் கலாராணி என உம்மைக் கருதி பிரதேச சபைத் தலைவருக்குத் தெரிவிக்கும் வகையில் 100 சொற்களில் ஒரு **கடிதம்** எழுதுக

**அல்லது**

இன்று இளைஞர் மத்தியிலும் குடும்பங்களிடையிலும் பிரிவினையை ஏற்படுத்துவதாக போதைப்பொருள் பாவனை விளங்குகின்றது. இளைஞர்களைத் தப்பான வழிக்கு இட்டுச்சொல்வதோடு மட்டுமல்லாது அவர்களைச் சமூகத்திலிருந்து அன்னியப்படுத்துவதாகவும் அது விளங்குகின்றது. இளைஞர்களை பலவீனமுள்ளவர்களாகவும் சமூகத்திலே பிறழ்வான நடத்தை உடையவர்களாகவும் இந்தப் போதைப்பொருள் மாற்றியமைக்கின்றது. இதிலிருந்து இளைஞர்களையும் நாட்டையும் பாதுகாக்க வேண்டும் என்ற தொனிப்பொருளை வெளிப்படுத்தி 100 சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** தயாரிக்குக

(15 புள்ளிகள்)